Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (55-62)

# Determining the Level of Argumentative Essay Writing Ability of Form 3 Students in Argumentative Essay Compilation Instruction Based on Creativity Theory

# படைப்பாற்றல் கோட்பாட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலில் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனின் அடைவு நிலையைக் கண்டறிதல்

**Jeevanath Prakash**

Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia
e-mail: jeevanathprakash@yahoo.com

**Published:** 30 April 2024

**To cite this article (APA):** Prakash, J. (2024). படைப்பாற்றல் கோட்பாட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலில் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனின் அடைவு நிலையைக் கண்டறிதல்: Determining the Level of Argumentative Essay Writing Ability of Form 3 Students in Argumentative Essay Compilation Instruction Based on Creativity Theory. *Journal of Valartamil*, *5*(1), 55-62. https://doi.org/10.37134/jvt.vol5.1.8.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.1.8.2024

**Abstract:** Writing skills is very important for a human. By having a good writing skills we can Express what we want to convey to others. We also can develop our thinking skills. Some students are not really good in writing skills especially in argumentative essay. This research is about developing argumentative writing skills among form 3 students by using constructivism theory which invented by Jean Piaget in 1964. There are many research to develop students writing skills by using this theory. So that researcher used the theory in writing argumentative essay in Tamil language. The case study of this research is five students who choose Tamil language as their additional subject in exam from SMK Taman Selesa Jaya. For doing this research researcher do pre-test, post-test, collection of argumentative essays and feedback form. By doing this we can improve the understanding of students how important is the writing skills. Not only that we also can improve students understanding to write argumentative essays. This is because argumentative essay is one of the essays which may ask in Ujian Akhir Semester Akademik (UASA) exam for form three students.

**Keyword:** form 3, Tamil language, Ujian Akhir Semester Akademik

**சுருக்கம்:** ஒரு மனிதனுக்கு எழுதும் திறன் மிகவும் முக்கியமானது. நல்ல எழுத்துத் திறனைக் கொண்டிருப்பதன் மூலம் நாம் மற்றவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவதை வெளிப்படுத்தலாம். நமது சிந்தனைத் திறனையும் வளர்த்துக் கொள்ள முடியும். சில மாணவர்கள் எழுதும் திறன் குறிப்பாக வாதக் கட்டுரையில் நன்றாக இல்லை. இந்த ஆராய்ச்சியானது 1964 ஆம் ஆண்டு ஜீன் பியாஜெட்டால் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கபூர்வமான கோட்பாட்டைப் பயன்படுத்தி படிவம் 3 மாணவர்களிடையே வாதம் எழுதும் திறனை வளர்ப்பதாகும். எனவே அந்த ஆய்வாளர் தமிழ் மொழியில் வாதக் கட்டுரை எழுதும் கோட்பாட்டைப் பயன்படுத்தினார். எஸ்.எம்.கே. தமன் செலேசா ஜெயாவின் தேர்வில் தமிழ் மொழியை கூடுதல் பாடமாக தேர்வு செய்யும் ஐந்து மாணவர்கள் இந்த ஆராய்ச்சியின் வழக்கு ஆய்வு. இந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு,

**படைப்பாற்றல் கோட்பாட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலில் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனின் அடைவு நிலையைக் கண்டறிதல்**

முன்-சோதனை, பிந்தைய சோதனை, வாதக் கட்டுரைகளின் தொகுப்பு மற்றும் பின்னூட்டப் படிவத்தை ஆய்வாளர் செய்ய வேண்டும். இதன் மூலம் எழுதும் திறன் எவ்வளவு முக்கியம் என்பதை மாணவர்களின் புரிதலை மேம்படுத்தலாம். அதுமட்டுமல்லாமல் வாதக் கட்டுரைகளை எழுதும் மாணவர்களின் புரிதலையும் மேம்படுத்தலாம். ஏனென்றால், படிவம் மூன்று மாணவர்களுக்கான உஜியன் அகீர் செமஸ்டர் அகாடமிக் (யுஏஎஸ்ஏ) தேர்வில் கேட்கக்கூடிய கட்டுரைகளில் வாதக் கட்டுரையும் ஒன்றாகும்.

**முக்கிய வார்த்தை:** படிவம் 3, தமிழ் மொழி, உஜியன் அகீர் செமஸ்டர் அகாடமிக்

## ஆய்வுப் பின்னணி

கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படும் தமிழ்மொழியின் கலைத்திட்டம் தொடக்கப்பள்ளித் தமிழ்க் கலைத்திட்டத்தின் வளர்ச்சியாக விரிவடைகிறது. தொடக்கப்பள்ளியில் பெற்ற தமிழ்மொழியாற்றலை மேலும் வளப்படுத்துவதோடு தேசியக் கல்வித் தத்துவத்திற்கிணங்க மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளில் சமன்நிலை வளர்ச்சி அடைவதை இக்கலைத்திட்டம் வலியுறுத்துகிறது.

படிவம் மூன்று தமிழ்மொழி பாடத்திற்கு கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு கலைத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. (**DSKP, Tingkatan 3, KPM).** இந்த அனைத்து திறன்களில் எழுத்து திறன் மாணவர்களுக்கு மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. இது ஏனென்றால் தேர்வில் மாணவர்கள் கேட்கும் கேள்விற்கு எழுத்து மூலமே பதிலை கொடுக்க வேண்டும். சிறப்பான எழுத்து திறன் இருந்தால் மாணவர்களுக்கு தேர்வில் சிறப்பான தேர்ச்சி கிடைக்கும். படிவம் மூன்றில் மாணவர்கள் சிறப்பான தேர்ச்சி பெற வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலை ஏனென்றால் படிவம் மூன்றில் மாணவர்கள் "**Ujian Akhir Sesi Akademik" (UASA)** எனக் கூறக் கூடிய அரசாங்க தேர்வை எழுத வேண்டும். இந்த தேர்வில் கிடைக்கப்பெறும் புள்ளிகளை வைத்தே அவர்கள் அறிவியல் துறையில் படிக்க போகிறார்களா கலைத்துறையில் படிக்க போகிறார்களா என நிற்ணேயக்கப்படும்.

மாணவர்களின் வாழ்க்கையை நிற்ணேயக்கப்படும் ஒரு சூழலில் இருக்கும் பொழுது; மாணவர்கள் கட்டாயமாக எழுத்து திறன் கொண்டிருக்க வேண்டும். எழுத்து திறன் இருப்பதால் மாணவர்கள் அவர்கள் படித்ததை முறையாக தேர்வில் எழுத முடியும். தேர்வில் முறையான எழுத்து திறன் கொண்டு எழுதினால் மட்டுமே; மாணவர்களால் சிறந்த தேர்ச்சி பெற்று படிவம் நான்கில் அவர்களுக்கு பிடித்த துறையில் இருக்க முடியும். இல்லையென்றால் மாணவர்களால் அவர்களுக்கு பிடித்த துறையில் படிவம் நான்கில் படிக்க இயலாது.

இதிலும் தேர்வில் கட்டுரை பகுதிக்கே அதிகமான புள்ளிகள் வழங்கப்படுகிறது. கட்டுரையிலும் பல வகையான கட்டுரைகள் தேர்வில் கேட்டப்படும். ஒவ்வொரு படிவத்திற்கும் ஏரத்தாள ஐந்து வகையான கட்டுரைகளை மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

எடுத்துக்காட்டுக்கு, வாதக் கட்டுரை, விவாதக் கட்டுரை, செயலறிக்கை, அலுவல் கடிதம், கருத்து விளக்கக் கட்டுரை போன்றவையாகும். படிவம் மூன்று தேர்வில் அதிகமாக வாதக் கட்டுரை கொண்ட தலைப்பே தேர்வில் அதிகமாக கேட்கப்படுகிறது. எனவே, ஆய்வாளர் கட்டமைப்புவாத கோட்பாட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலில் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனைக் கண்டறிதல் என்ற தலைப்பில் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

## ஆய்வுச் சிக்கல்

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் மொழி திறன்கள் ஒவ்வொரு மாணவனும் கைவரப்பெற வேண்டும். அதில் குறிப்பாக வாசிப்புத் திறன் மாணவர்களிடையே வளர்க்க தேசிய தமிழ் கல்வி கலைத்திட்டம் வலியுறுத்துகிறது. ஏனென்றால், உஅசா, எஸ்.பி.எம் தேர்வு எடுக்கும் படிவம் 3 மற்றும் படிவம் 5 மாணவர்களுக்கு பனுவலை வாசித்து கருத்துணர்தல் கேள்வி பதிலளித்தல் எனும் தேர்வு நடத்தப்படுகிறது. அதில் மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களை எடுக்க வாசிப்பு திறன் முக்கிய பங்களிக்கின்றது. அவ்வகையில் ஒரு சில மாணவர்களால் வாசிப்புத் திறனில் சிறந்து விளங்க முடியாத நிலையில் இந்த கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்புத் திறன் அடைவுநிலையை மேம்படுத்த உதவுகிறது.

ஆய்வாளர் இந்த கோட்பாட்டைத் தேர்தெடுத்த காரணமானது மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த எதுவாக இருக்கும் என்பதாகும். அதுமட்டுமல்ல, கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்பது மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமையும். கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்பது ஆசிரியர், மாணவர் மற்றும் பள்ளிப் பாடத்திட்டத்திற்கும் ஏற்புடையதாக அமையும் என்பதை இந்த ஆய்வின் வழி ஆய்வாளர் கண்டறியவுள்ளார்.

## ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை:

I. கட்டமைப்புவாத கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலுக்கு முன் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனின் அடைவுநிலையை கண்டறிதல்.
II. கட்டமைப்புவாத கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலுக்கு பின் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனின் அடைவுநிலையை கண்டறிதல்.

III. கட்டமைப்புவாத கோட்பாட்டின் அடிப்படையில் உருவாப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தல் தொடர்பான மாணவர்களின் கண்ணோட்டத்தை ஆராய்தல்.

**ஆய்வு கருவி**

இந்த ஆய்வின் கருவிகளாக ஆய்வாளர் ஓர் வாதக் கட்டுரை திரட்டு ஒன்றினை தயார் செய்தார். அந்த திரட்டை கொண்டு நான்கு வாரங்கள் மாணவர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது. இதை மாணவர்களுக்கு தட்டச்சு செய்தும் புலனக்குழுவிலும் கொடுத்தார். இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு முன்னறித் தேர்வு பின்னறித் தேர்வு என இரண்டு தேர்வுகள் வழங்கப்பட்டது. இந்த இரண்டு தேர்வையையும் ஆய்வாளர் ஆசிரியர் துணையோடு ‘உ.அ.சா’ தேர்வில் பயன்படுத்தப்படும் மதிப்பெண் வரைமனம் கொண்டு திருத்தினார்.


.

**வினா**

**வினா 1: கட்டமைப்புவாத கோட்பாட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலுக்கு முன் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறன் எவ்வாறு உள்ளது?**

இப்பகுதியில் ஆய்வாளர் மாணவர்களுக்கு வாதக் கட்டுரை ஒன்றினை எழுதப் பணித்தார். மாணவர்கள் எழுதிய வாதக் கட்டுரை பதில்கள் அனைத்தும் வரைப்படத்திலும் குறிவரைவைக் கொண்டு விளக்கப்பட்டிருக்கும்.


முன்னறித் தேர்வில் மாணவர்கள் எழுதிய வாதக் கட்டுரையின் புள்ளிகள் பின்வருமாறு:




**வரைப்படம் 3**


மாணவர்களின் முன்னறித் தேர்வு மூலம் அவர்கள் வாதக் கட்டுரையை முறையாக எழுதுகிறார்களா என கண்டறியப்பட்டன. மாணவர்கள் மிக எளிய முறையில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாதக் கட்டுரையை எழுதியுள்ளார்கள். அதுமட்டும்மில்லாமல், மாணவர்களில் சிலர் நல்ல மொழிநடை கொண்டு விவரிக்காமல் முன்னறித் தேர்வைப் பதிலளித்தனர். ஆய்வாளர் வழங்கிய முன்னறித் தேர்வில் சில மாணவர்கள் எந்தவொரு ஏற்புடைய மொழியணிகளை பயன்படுத்தாமல், மேலோட்டமான விளக்கத்தை மட்டும் கொண்டு வாதக் கட்டுரையை எழுதியிருந்தார்கள். இந்த கட்டுரைகள் படிவம் மூன்றுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பெண் வரைமானம் கொண்டு திருத்தப்பட்டது. (பி.)

மாணவர் 1




மாணவர் 1 தனது முன்னறித் தேர்வில் 20 புள்ளிகளைப் பெற்றார். இது ஏனென்றால் இந்த மாணவரின் கட்டுரையில் இரண்டு கருத்துகள் மட்டுமே இருந்தது. கொடுக்கப்பட்ட கருத்துகள் ஓரளவு சிறப்பாக விளக்கிருந்தார். ஆனால் இவர் எழுதியிருந்த கருத்துகளை தெளிவாகவும் கோவையாகவும் இல்லாமல் இருந்தது.

மாணவர் 2



மாணவர் 2 தனது முன்னறித் தேர்வில் 17 புள்ளிகள் பெற்றார். இவரின் கருத்துகள் மூன்று இருந்தாலும் முடிவுரை இல்லாமல் இருந்தது. இவர் எழுதியிருந்த கருத்துகள் முழுமையாக விளக்கப்படாமல் இருக்கிறது. கருத்துகள் தெளிவில்லாமல் இருந்தது. இலக்கண பிழைகளும் இதில் அதிகமாக இருந்தது.

மாணவர் 3



மாணவர் 3 13 புள்ளிகளை தனது முன்னறித் தேர்வில் பெற்றார். இந்த மாணவர் கொடுக்கப்பட்ட நேரத்தில் முன்னுரை, ஒரு கருத்து மற்றும் முடிவுரையை மட்டும் எழுதிருந்தார். இவர் கொடுத்த கருத்தும் முழுமையாக விளக்கவில்லை. ஒரு வாக்கியத்திற்கும் அடுத்த வாக்கியத்திற்கும் கோவை இல்லாமல் இருந்தது. இவருக்கு சொல்வளமும் குறைவாகவே உள்ளது. கல்விசார் முறையில் எழுதால் கல்விசாரா முறையில் அதிகமான வார்த்தைகளை பயன்படுத்தி எழுதியிருந்தார்.

## முடிவு

கட்டமைப்புவாத கோட்பாட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலில் வாதக் கட்டுரைத் திரட்டு பயிற்றுவித்தலில் படிவம் 3 மாணவர்களின் வாதக் கட்டுரை எழுதும் திறனின் அடைவுநிலையை கண்டறிதல் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு வெற்றியைத் தந்துள்ளது. இதற்கு மாணவர்களிடையே நடத்தப்பட்ட முன்னறி மற்றும் பின்னறித் தேர்வின் முடிவுகள் இதற்கு சான்றாக அமைகின்றது. ஆய்வுக் கண்டுப்பிடிப்புகளும் தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகளும் இந்த இயலில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, ஆய்வாளர் மேற்கொண்ட இந்த ஆய்வு மற்ற ஆய்வாளர்களுக்கு மட்டும் உதவும் வகையில் இல்லாமல் மற்ற அனைவருக்கும் நன்மை பயைக்கும் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

## REFERENCES

Ayele Eyob Kenta, Tesfaye Buche Bosha. (2019). An Investigation into Factors that Affect Students' Writing Skills: The Case of Sodo Secondary School. https://www.sciencepublishinggroup.com/article/10.11648/j.ellc.20190402.14

Bekki Brau. (2020). Constrivtivism. https://edtechbooks.org/studentguide/constructivism